செ.வெ.எண்:37/2019 நாள்:16.10.2019

# பத்திரிக்கைச் செய்தி

பருவமழை காலங்களில் இடி, மின்னல் போன்ற இயற்கை அபாயங்கள் ஏற்படும்போது தகுந்த முன்னெச்சரிக்கையுடனும், விழிப்புணர்வுடனும் இருக்க கீழ்க்கண்ட வழிமுறைகளை பொதுமக்கள் கையாண்டு மனிதஉயிரிழப்பு, கால்நடை உயிரிழப்பு மற்றும் உடமைகளுக்கு ஏற்படக்கூடிய சேதங்களைத்தவிர்த்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இடி, மின்னல் ஏற்படும் சமயங்களில் வெளியில் செல்வதை தவிர்க்கவேண்டும். பயணத்தைத் தவிர்க்கவேண்டும். வீட்டின் கதவுகள் மற்றும் ஜன்னல்களை மூடி வைக்கவேண்டும். குழந்தைகள் வீடுகளில் உள்ளனரா என்பதையும் வளர்ப்பு பிராணிகள் கொட்டிலில் உள்ளனவா என்பதை உறுதி செய்யவேண்டும். மேலும் வீட்டிலுள்ள மின் மற்றும் மின்னணு சாதனங்களின் தொடர்புகள் துண்டிக்கப் பட்டுள்ளனவா என உறுதி செய்தல் வேண்டும்.

இடி,மின்னலின் போது வெட்ட வெளியிலோ மரத்தடியிலோ உயர்மின் கோபுரங்கள் மற்றும் இரும்பு வேலிகளின் அருகில் நிற்பதோ தங்குவதோ கூடாது. கால்நடைகளை மரத்தில் கட்டுவதையோ, வெளியில் மேய்ச்சலுக்கு விடுவதையோ தவிர்த்திடவேண்டும். இடி,மின்னலின் போது மின்னணு சாதனங்களை அறவே பயன்படுத்துதல் கூடாது. இடி, மின்னலின் போது மேற்கூரை வேயப்பட்ட கட்டிடங்களின் கீழ் ஒதுங்கிட வேண்டும். மிக உயரமான பகுதிகளில் உள்ள கட்டிடங்களின் கீழ் தங்குவதை தவிர்த்திட வேண்டும்.

ஆறுகள்,குளங்களில் குளிப்பதைத் தவிர்க்க வேண்டும். இரும்பு கொடிகம்பம், டிவிஆண்டனா, செங்குத்தான உலோகங்களினாலான சாதனங்களின் அருகில் நிற்கக் கூடாது. இருசக்கர வாகனங்களில் (மிதிவண்டிஉட்பட) செல்வதைத் தவிர்க்க வேண்டும். உலோகத்தினாலான குடை மற்றும் பொருட்களை எடுத்துச் செல்வதை தவிர்க்க வேண்டும்.

அவ்வப்போது வெளியிடப்படும் வானிலை அறிவிப்புகளை கவனத்தில் கொண்டு அதன்படி செயல்பட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.ஜெயகாந்தன்,இ.அ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**::வெளியீடு::**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், சிவகங்கை.**